பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 | ஐப்பசி 11 | ஜூல்-கஜ் 17 | இதழ் 258
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 27 - 10 - 80

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA
RECEIVED
1980 -10-27
PERIODICALS DIVISION
LIBRARY

## ஆசிரியர் சம்பளத்தை கொள்ளையடிக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்களின் சம்பளத்தை துப்பாக்கிமுனையில் கொள்ளையடிக்க இரண்டு இளைஞர்கள் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்தது!

இத் துணிகர முயற்சி கடந்தவாரம் நிகழ்ந்தது.

அச்சுவேலி தபாற்கந்தோரிலிருந்து, ஒரு பாடசாலை ஆசிரியர்களின் சம்பளப் பணமான 23 ஆயிரத்து 205 ரூபாவை, பாடசாலை அதிபரும் ஆசிரியர் ஒருவரும் மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்றுகொண்டிருந்த போது தம்பாலைச் சந்திக்கு அருகாமையில் திடீரெனத் தோன்றிய இரண்டு இளைஞர்கள், இவர்களை வழிமறித்தனர் என்றும், இவர்கள் கையில் சுழல்துப்பாக்கி இருந்ததுஎன்றும், ஆனாலும் இளைஞர்களின்பயமுறுத்தலைப்பொருட்படுத்தாது, அதிபர் வேகமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தியபோது துப்பாக்கி வேட்டுச்சத்தமொன்றுகேட்டதாகவும் இச் சம்பவம்பற்றிச் சொல்லப்படுகிறது.

இச்சம்பவத்தின்போது எவருக்கும் காயமேற்படவில்லை.

# இந்தியாவில் ஜனதிபதி ஆட்சிமுறை! சிந்திக்குமாறு

## கோருகிறார் இந்திராகாந்தி

புதுடில்லி, அக். 26

### இந்தியாவின் முப்பதாண்டுகால அரசியலமைப்புத்திட்டம், விரைவில் மாற்றி அமைக்கப்படலாம்.

**பாராளுமன்ற ஆட்சிக்குப்பதிலாக ஜனதிபதி ஆட்சிமுறையைக்கொண்ட அரசாங்கத்தை அமைக்கும்வகையில் இந்தியாவின் அரசியலமைப்புத் திட்டம் மாற்றி அமைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

இதுசம்பந்தமான விசேஷ மகாநாடொன்றை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா இன்று புதுடில்லியில் கூட்டி, புதிய அரசியலமைப்பின் அவசியம்குறித்து வலியுறுத்தினார்.

இந்தியாவில் கடந்த 30 வருடங்களாக அமுலில் இருந்துவரும் அரசியலமைப்புத் திட்டத்தைச் சீரமைத்து, ஜனதிபதி அமைப்புமுறையிலான அரசாங்கமொன்றை உருவாக்குவது பற்றி சிந்திக்குமாறு சட்டஅறிஞர்களை பிரதமர் இந்திராகாந்தி இம் மகாநாட்டில் கேட்டுக்கொண்டார்.

ஜூரிமார்கள், கல்விமான்கள், பெருஞ்சட்டஅறிஞர்கள், அரசியல் தலைவர்கள் கலந்துகொண்ட இம் மகாநாட்டில் பிரதமர் இந்திராகாந்தி தொடர்ந்து பேசுகையில்;

"ஆங்கிலேய அமைப்பு முறையை அடிப்படையாகக்கொண்டபாராளுமன்ற ஆட்சிக்குப் பதிலாக வேறு ஒரு முறையிலான அரசாங்கமொன்றை அமைப்பது பற்றிய வாய்ப்புக்களை நீங்கள் ஆராய்ந்து முடிவெடுக்கவேண்டும். வன்செயலும், ஜனநாயகமும் ஒருபோதும் ஒன்றாக செயல்படமுடியாது' என்று குறிப்பிட்டு;

'ஜனதிபதி ஆட்சிமுறை ஜனநாயகத்துக்கு விரோதமானதல்ல என்பதற்கு அமெரிக்கா, பிரான்ஸ் முன்மாதிரியாகத் திகழ்கின்றன' என்று பிரதமர் இந்திரா விளக்கினார்.

## பாராளுமன்றம் இன்று கூடுகின்றது

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று பி. ப. 3 மணிக்கு கூடுகிறது.

குற்றவியல் நடவடிக்கை முறை திருத்தச்சட்டமூலம், தண்டனைச் சட்டக்கோவை திருத்தச்சட்டமூலம், குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை திருத்த சட்டமூலம், மோட்டார் வாகன திருத்தச் சட்டமூலம் ஆகியவற்றின் மீதான விவாதங்கள் இன்றைய சபை ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெற்றுள்ளன.

நாளைக்காலை 10 மணிக்கு சபை மீண்டும் கூடும்போது, 1981ம் ஆண்டுக்கான வரவு-செலவு மதிப்பீட்டு சட்டமூலத்தை நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல் சபையில் சமர்ப்பிப்பார். நிதியமைச்சர் தனது வரவு-செலவுத்திட்ட உரையை அடுத்தமாதம் 5-ம் தேதி சபையில் நிகழ்த்துவார். (ம)

## இந்திய ரயில்வே அமைச்சர் ராஜினமா

புதுடில்லி, அக். 26

இந்திய மத்திய ரயில்வே அமைச்சர் திரு. கமலாபதி திரிபாதி தமது அமைச்சர் பதவியை [illegible] ராஜினாச்செய்துள்ளார் எனத் தெரியவருகிறது. இது குறித்து நிருபர்கள் அவரிடம் வினவியபோது கருத்து எதுவும் வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

## கார்ட்டர் சந்தேகம்!

வாஷிங்டன், அக். 26

அமெரிக்க பணயக்கைதிகள் விவகாரம் குறித்து ஈரானிய பாராளுமன்றம் இன்று இறுதிமுடிவு எடுக்காதபோதிலும், இதுபற்றி அமெரிக்க அதிபர் சந்தேகம் தெரிவித்துள்ளார். செய்தியாளர்களுக்கு அமெரிக்க அதிபர் திரு. கார்ட்டர் இன்று அளித்த பேட்டியில், பணயக்கைதிகளை ஈரான் விடுதலைசெய்யும் என்பதில் தமக்கு நம்பிக்கை இல்லையென்று தெரிவித்துள்ளார்.

## நேற்று நடந்த உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு பதவி இழந்தவர்களுக்கு நீதி வழங்கக்கோரி நேற்றுக்காலை யாழ். வீரமாகாளி அம்மன் கோவிலில் நடைபெற்ற உண்ணாவிரதத்தில் சுமார் 150 பேர் வரை கலந்துகொண்டனர்.

உண்ணாவிரதம் நேற்றுக் காலை 11 மணி தொடக்கம் பிற்பகல் 2-30 மணிவரை நடைபெற்றது. உண்ணாவிரதத்தில் தமிழர்விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த கோப்பாய் எம்.பி.திரு.எஸ். கதிரவேலுப்பிள்ளை,யாழ்ப்பாணம் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன், மற்றும் பிலிப்பைன்ஸ் தேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் மத குருவும் அவரது பாரியாரும், தாய்லாந்து,பர்மா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பௌத்த மத குருமார்களும், அனுராதபுரத்தைச் சேர்ந்தவரும், வேலைநிறுத்தக்காரர்களுக்காகப் போராடி இரண்டுவாரம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவருமான பௌத்த மதகுரு ஒருவரும், கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த வண. பிதா ஜோகான் தேவானந்த ஆகியோருடன் நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கத்தைச் சேர்ந்த நீலன் கந்தசாமி,புரட்சிகர மாக்ஸிய கட்சியைச் சேர்ந்த (பாலாதம்பு குழு) எஸ். பரராசசிங்கம், இலங்கை கம்யூனிஸ்ட்கட்சியைச்சேர்ந்த திருவாளர்கள் ஏ. வைத்திலிங்கம், பொன், குமாரசாமி, எஸ். விஜயானந்தன், நவசமசமாஜக்கட்சியைச்சேர்ந்த திரு. கே. அண்ணாமலை, இளைஞர் பேரவையைச் சேர்ந்த மாவை சேனாதிராசா, மற்றும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், இதர சமய, சமூக, பொது ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களும் திரு. ஈழவேந்தனும் மற்றும் பலரும் கலந்துகொண்டனர்.

உண்ணாவிரதம் ஆரம்பமாவதற்கு முன் யாழ். வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசையில் சகலரும் கலந்துகொண்டு பக்தி கீதங்களைப் பாடினர். ஆலயப் பூசகர் சகலருக்கும் திருநீறு, சந்தனம் வழங்கிதானும் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டார்.

பெரும் திரளான மக்கள் திரண்டுநின்று உண்ணாவிரதத்தைப் பார்வையிட்டனர். (கொ)

பணயக்கைதிகள் விவகாரம்:

# ஈரானியப் பாராளுமன்றம் அந்தரங்கமாகக் கூடியது!

## தீர்மானம் இன்று வெளியாகும்?

தெஹ்ரான், அக்.26

அமெரிக்கப் பணயக்கைதிகள் விவகாரம் தொடர்பாக ஈரானிய பாராளுமன்றம் இன்று அந்தரங்கமாகக் கூடி மூன்று மணிநேரம் வரை ஆராய்ந்தபோதிலும் இறுதிமுடிவுஎதுவும் எடுக்கவில்லை. பாராளுமன்றம் மீண்டும் நாளை திங்கட்கிழமை கூடும்போது இறுதி முடிவு எடுக்கப்படலாம் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது

பணயக்கைதிகள் தொடர்பாகஆராய்ந்துஅறிக்கைசமர்ப்பிக்குமாறு ஒரு மாதத்துக்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட விசேட ஆணைக்குழு தனது அறிக்கையை பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து இன்று அறிக்கை வாசிக்கப்பட்டு உடனடியாக விவாதம் ஆரம்பமானது. அந்தரங்கமாக நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் பார்வையாளர்களோ அல்லது பத்திரிகையாளர்களோ அனுமதிக்கப்படவில்லை.

### ஒருவருடக் 'கதை'

தெஹ்ரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தை ஈரானிய தீவிரவாத இளைஞர்கள் கடந்த வருடம் நவம்பர்மாதம் நான்காம் திகதி கைப்பற்றினர். 52 அமெரிக்கர்களை பணயக்கைதிகளாக இப்பொழுது வைத்துள்ளனர்

## யாழ். சுகாதார விழா இன்று ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து ஒரு வாரம் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9மணிக்கு நகர மண்டபத்தில் நகரக்கொடியை முதல்வர் திரு. இராசா விசுவநாதன் ஏற்றிவைத்துசுகாதார விழா ஆரம்பவுரையை நிகழ்த்துவார். விழா அமைப்புக் குழுத்தலைவரும், துணைமேயருமான [illegible] சேவியர் முடிவுரை நிகழ்த்துவார்,

இன்றைய நிகழ்ச்சிகளின்போது 1, 12, 14, 17ம் வட்டாரங்கள் சுத்திகரிப்பு செய்யப்படும். நகர மண்டபத்தில் [illegible] பாடசாலைகளுக்கிடையிலான [illegible] பேச்சுப்போட்டிகளும் [illegible] பெறும்.

GRAND SALE...
பண்டிகைக்கால மலிவு விற்பனை
பாட்டா பாதணிகளுக்கு மட்டும்,
சலுகை குறிப்பிட்ட தினங்களுக்கு.
முந்துங்கள்! பயன் பெறுங்கள்!!
எஸ். சின்னத்துரை அன் பிறதர்ஸ்,
39, [illegible] ஸ். வீதி -- யாழ்ப்பாணம்.
[illegible] 284. த. பெ. எண் 101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு மாத பேட்டுக் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. இ. பரஞ்சோதி ''வசந்தம்'' இணுவில் வீதி, மானிப்பாய். 7185

திருநெல்வேலி வளாகத்திற்கு அண்மையில் ஆறுபரப்புக் காணி விற்பனைக்குண்டு. பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப்படும். K. சண்முகலிங்கம், விளையாட்டரங்க வீதி, கல்வியங்காடு. 7188

## புத்தூர் கிராமாட்சி மன்றம் ஏலவிற்பனை

1. எமது சபைக்குச் சொந்தமான ஆவரங்கால் மீன்சந்தைக் காணியில் உள்ள இரு பெரிய மலைவேம்புகள் 1980-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி மீன் சந்தையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ரூபா 50,000/-க்கு கூடிய கேள்வி கேட்பவர்களுக்கே இரு மரங்களும் கொடுக்கப்படும்.

2. கேள்வி கேட்போர் கேள்வித் தொகையில் அரைவாசிப் பணத்தினை உடனும், மிகுதியை ஏலம் விட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளும் சபையில் செலுத்தியாக வேண்டும். பணம் முழுவதும் செலுத்தியதின் பேரில் சபையின் முன் அனுமதியுடனேயே மரத்தை தறிக்க வேண்டும்.

3. கேள்வி கேட்போர் கேள்வி கேட்பதற்கு முன்னர் ரூபா 1000/- வைப்புப்பணமாக அவ்விடத்தில் வைத்துச் செலுத்தவேண்டும். இப்பணம் பின்னர் திருப்பி வழங்கப்படுமாயினும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் மரத்திற்கான முழுத் தொகையினையும் உரிய காலத்தில் செலுத்தத் தவறின் அவரின் வைப்புப பணம் பறிமுதல் செய்யப்படும்.

ஏனைய விபரங்களை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஒப்பம்

பொ. இராமநாதன்,
விசேட ஆணையாளர்.

கே. சதாசிவம்,
பிரதம எழுதுநர்.

கிராமாட்சி மன்றம்,
புத்தூர்,
21-10-80. 7182

## டாக்டர்கள் வாகனங்களுக்கு கட்டிடவசதி

(நெல்லியடி)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரிகளின் மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டிடமொன்று அமைக்கப்பட்டுவருகின்றது.

கட்டிடச் திணைக்களம் மேற்கொண்டுவரும் இவ்வேலைகள் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் பூர்த்தியடைந்துவிடுமெனவுப் தெரியவருகின்றது. (கு)

## சாவகச்சேரி கல்விவள நிலையம்

(மட்டுவில்)

சாவகச்சேரி கல்வி வட்டாரத்தின் கல்வி வள நிலையம்; அடுத்த ஆண்டு ஜனவரி முதல் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இயங்கும் என்று சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சச்சிதானந்தம் தெரிவித்தார்.

இந்நிலைய வளர்சசியைக் கவனிக்குமுகமாக சாவகச்சேரி கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த ஏழு மகாவித்தியாலங்களின் அதிபர்களைக் கொண்ட ஒரு நிர்வாசக் குழுவையும், வட்டாரக் கல்வி அதிகாரி நியமித்துள்ளார். (கு)

## கேள்வி அறிவித்தல்

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தின் 24 ஸ்ரீ 4556 இலக்கமுடைய இஸ்சிசு (ISUZU) லொறிக்கு புதிய கூடாரம் அமைப்பதற்கும், போனற்றிங்கர் வேலை செய்வதற்கும் அதற்கு பெயின்ற் அடிப்பதற்கும், லொறியின் மின்இணைப்பு சம்பந்தமான வயறிங் வேலை முழுவதும் புதிதாகச் செய்வதற்கும் கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றன. மேலதிக விபரத்துக்குச் சங்கப் பொதுமுகாமையாளருடன்தொடர்பு கொள்ளவும். வேலையை ஏற்றுக் கொள்பவர் சங்கத்துடன் வேலை சம்பந்தமான ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ளுதல் வேண்டும். விண்ணப்பங்கள் 80-11-10ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்கத்தில் '24 ஸ்ரீ 4556 கூடார வேலை' எனக் குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்

தெல்லிப்பளை
ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.
1980-10-27. 7181

## யுத்தத்தில் பாதிப்புற்றோருக்கு நிதி உதவி

(புளியங்குளம்)

இலங்கை போர்வீரர்கள் சங்கத்தினால், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோரினதும் அவர்களது பராமரிப்பிலுள்ளோரினதும் புனர்வாழ்வுக்காக நிதிசேகரிக்கும் பொருட்டு அடுத்தமாதம் 7ம் திகதி கொடித்தினம் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் கொடிவிற்பனைக்காக வரும் சங்க அங்கத்தவர்களுக்கு பாடசாலைக் கருமங்கள் தடைப்படாவண்ணம் தங்களால் இயன்ற உதவிகளை வழங்குமாறு வவனியா மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு.எம். சிமியாம்பிள்ளை சகல பாடசாலை அதிபர்களையும் வேண்டியுள்ளார்-

## அரச அதிபருக்கு அல்லைப்பிட்டியில் வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அமைச்சின் செலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கும்அவரது பாரியாருக்கும் இன்று திங்கட்கிழமை அல்லைப்பிட்டியில் வரவேற்பளிக்கப்படவுள்ளது.

அல்லைப்பிட்டி நலன்புரிக் கழகமும், மக்களும் இணைந்து நடாத்தும் இவ்வரவேற்பு வைபவம் அல்லைப்பிட்டி இனிச்சபுளியடி முருகன் ஆலய வீதியில் அமைக்கப்பட்ட விசேட அரங்கில் நடைபெறும்.

கொழும்பு மேல்நீதிமன்ற உத்தியோகத்தர் திரு. க. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகம் சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. அ. செல்தில்வடிவேல், சட்டத்தரணி திரு. ப. கதிரவேலு, நலன்புரிக்கழகச் செயலாளர் திரு. சோ. சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றுவார்கள். பிற்பகல் அல்லைப்பிட்டி முதலாம் வட்டாரத்திலிருந்து முருகன் ஆலயம் வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவர். (கொ-கு)



ஏழாலை தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்ட மில்க்வைற் அதிபர் திரு. க.சனகராசா செல்வி ஆ வத்தலாவிற்குப் பரிசில் வழங்குவதைம். அருகில் பாடசாலை அதிபரையும் படத்தில் காண்க.

## ''அஞ்சிவாழும் மனிதனுக்கு சோதிடக்கலை சாந்தியளிக்கிறது''

— பரமாச்சாரிய சுவாமிகள்

(யாழ்ப்பாணம்)

''மனித வாழ்வை, நவகோள்கள் ஆட்டிப்படைக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் நாளை தனக்கு என்ன நேருமோ என்று தினமும் அஞ்சுகிறான். அவனுக்கு, மனத்திடத்தையும் நம்பிக்கையையும் சோதிடக்கலை அளிக்கின்றது. இதனால் பூலோகத்தில்சோதிடக்கலை அழியாது.''

இவ்வாறு நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சோதிட கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்து அருளுரை வழங்கிய நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகள் கூறினார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகசிரேஷ்ட தமிழ் விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியஐயர் கலந்துரையாடலுக்கு தலைமைதாங்கினார்.

ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகள் தொடர்ந்து உரையாற்றுகையில் 'நான் ஒரு அவதார புருஷரல்ல. சோதிடக்கலையில் அதிக நம்பிகையுடையவன். நட்சத்திரம் பார்த்து கருமங்களைச் செய்பவன். எண் பொருத்தம் அறிந்து நட்புக் கொள்பவன். இன்றைய வைபவத்தில், விமர்சனத்துக்கு எடுத்துக்கொண்ட 'அதிர்ஷ்ட வழிகாட்டி' நூலை நான் முழுமையாகப் படித்துள்ளேன். இந்நூல் ஆசிரியரைப்போல அழிவற்ற சோதிடக்கலையை வளர்க்கபலரும் நூல்களை வெளியிட வேண்டுமென ஆசிக்கின்றேன்'' என்றார்.

திரு.நா. சுப்பிரமணிய ஐயர் தலைமையுரை ஆற்றுகையில், ''யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தற்போது தமிழை ஆராய்ந்து வருகின்றோம். இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் இந்துநாகரிக பீடத்தில் சோதிடக்கலைபற்றி ஆராய்வோம். இந்து நாகரிகத்தில்சோதிடக்கலைஒருபகுதி. உலக நாடுகளிலெல்லாம், ஒரு காலத்தில் சோதிடக்கலை புத்தி சாதுரியமாக மக்களை ஏமாற்றும் கலையென பேசப்பட்டுவந்ததுடன் போட்டிபோட்டு முன்னேறி வருகின்றது,'கம்பியூட்டர்' யுகத்திற்கு கூடசோதிடம் அடியெடுத்து வைத்துள்ளது.

''இன்று நாம் கற்கின்ற கேத்திரகணிதவியல்கூட, முன்னைய காலங்களில் முனிவர்கள், யாகங்களை நிறைவேற்றுவதற்கு, திசைபார்த்து குண்டம் அமைத்த நிலையில் இருந்துதான் தோன்றியது. ஒரு காலத்தில் சோதிடம் பார்ப்பவனை கோனழ, வேலையில்லாதவன், தவறான வழியால் செல்ல வழிவகுக்கிறான் என்று சாடிய சமுதாயம் இன்றைய காலகட்டத்தில் வினையின் பயனால் அவனை நவகோள்கள் ஆட்டிப்படைகின்றன என்பதையும், அவனது சாதகத்தில் அவனது வினைப்பயனுக்கமைய கிரகங்கள் அமைந்து கெடுதல் செய்கின்றன என்பதையும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது சமுதாயத்தில், சோதிடக்கலை பற்றிய அறிவு வளர்ச்சியடைந்து வருவதை எமக்கு காட்டுகின்றது. யாழ்ப்பாணத்தில் சோதிடர்கள் அதிகமாகவுள்ளதால், புதிய புதிய ஆய்வுகளை மேற்கொள்ள ஒன்றிணைப்பு மையம் ஒன்று அமைத்து செயல்படவேண்டும் என்றார்.

சோதிட கலாநிதி பண்டிட் கே. என் நவரத்தினம், ஆயர்பாடி வே. த. மயில்வாகனம், கைரேகை சாஸ்திரிய நிபுணர் திரு. த. பாக்கியராஜா, திரு. மு. மு. மார்க்கண்டு, எண் சோதிடர் திரு. எஸ். சி. எஸ். சிதம்பரநாதன், திரு. க. சாம்பசிவம், திரு. வரசி செல்லத்துரை ஆகியோர் உரையாற்றினர்.

இலங்கை கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றிய செயலாளர் திரு. ஐயா சச்சிதானந்தன் நன்றியுரை யாற்றினார்.

## ''சாதிப்பிரச்னை இன்று குறைந்துள்ளது''

(அரியாலை)

''தமிழ் மக்கள் மத்தியில் இன்று சாதிப்பிரச்னைகள் ஓரளவு குறைந்து வருகின்றன. ஆனால் கடந்த முப்பதுவருடங்களுக்கு முன் ஒடுக்கப்பட்ட மக்கள் தம் விடுதலைக்காகப் பல போராட்டங்களை நடத்தினார்கள்'' என்று காரைநகர் இந்துக்கல்லூரி உப அதிபர் திரு. காரை. சுந்தரம்பிள்ளை அரியாலை கலைமகள்சனசமூகநிலைய இளைஞர் கலாமன்றத்தின் ஆதரவில் நடைபெற்ற அமரர் கதிர்காமு நினைவுதினக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் வ. இராசையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சுந்தரம்பிள்ளை தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

யாழ்ப்பாணக்குடாநாட்டில் சாதிவெறி தலைவிரித்தாடிய காலத்தில் அதற்கெதிராகத் தம்மை அர்ப்பணித்து உழைத்தவர்களின் வரிசையில் அமரர்கள் ஆ. ம. செல்லத்துரை, சைவப் புலவர் வல்லிபுரம், காரைநகர் திரு. போல் ஜோனு போன்றவுர்களின் வரிசையில் அமரர் விளங்குகின்றார். அவர் சமூகத்துக்கு ஆற்றிய சேவையின் நினைவுச்சின்னமாக கலைமகள் வாசிகசாலை விளங்குகிறது. இதனைச்சிறந்த முறையில் அமைத்து நடத்த முன்னின்று உழைத்தவர்களில் அமரர் கதிர்காமு முதன்மை பெற்றவராக விளங்குகின்றார். சமூகத்துக்குச்சேவை செய்தவர்கள் எந்த நிலைமையில்இருந்தாலும் அவர்கள் என்றும் நினைவு கூரப்பட்ட தேண்டிய தாகும்.

அரியாலையூர் கவிஞர் வே ஐயாத்துரை, செல்வன் தங்கராசா, டொக்டர் மு,கோபாலன் ஆகியோரும் பேசினர். திரு. வீரசிங்கம் நன்றிதெரிவித்துப்பேசினார். (அ

## விவசாயிகளுக்கு பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட தொடர்புக் கமக்காரர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் இன்று ஆரம்பமாகிறது.

இன்று திங்கட்கிழமை குமிழமுனை கரடி கூவல் என்னுமிடத்திலும் நாளை முத்தையன் கட்டு இடதுகரையிலும், 29ம் திகதி உடையார் கட்டு பகுதியிலும், 30ம்திகதி துணுக்காய் ஒலுமடு தங்குளம் பகுதியிலும் இப்பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும். (நெல். நி)- (கு)

## இளம்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இராசநாதனும் கலந்து கொண்டார். இதனையடுத்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், இந்து மாமன்றமும் இணைந்து [illegible]

## கேள்வி அறிவித்தல்

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சிறுவர் பாடசாலைக்கு கீழ்க்காணும் தளபாடங்கள் விநியோகம் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மேசை 50 (லாச்சியில்லாதது) | — | உயரம் — 18''<br>அகலம் — 14''<br>நீளம் — 4' |
| 2. | வாங்கு 50 | — | உயரம் — 12''<br>அகலம் — 12''<br>நீளம் — 4' |

பாவிக்கவேண்டிய பலகை யாவறனை.

விண்ணப்பங்கள் 80-11-03-ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்கத்தில் 'தளபாட விநியோகம்' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்,
தெல்லிப்பளை.

1980-10-27. 7180

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கான் அரசியல் தலைவர் மே. ஜெர்மனியில் தஞ்சம்!

## "சோவியத்தின் நடவடிக்கையைக் கண்டிக்கவே பெல்கிரேட் கூட்டத்தில் குரல் கொடுத்தேன்"

பிராங்போர்ட்,அக்,26

பெல்கிரேட்டில் நடைபெற்ற யுனஸ்கோ மாநாட்டில். ஆப்கானிஸ்தான்மீது சோவியத் துருப்புகள் தாக்குதல் நடாத்தி வருவதை கண்டித்து உரையாற்றிய ஆப்கானிஸ்தான் தலைவர் மேற்கு ஜெர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார்.

டென்மார்க்கில் சோவியத் யூனியனின் நடவடிக்கையைக் கண்டித்து உரையாற்றிய பின்னரே மேற்கு ஜெர்மனிக்கு வந்து சேர்ந்த இவர் மியூடிக் விமான நிலையத்தில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றினார்.

ஆப்கானிஸ் தான் மக்களை சோவியத் துருப்புக்கள் நசுக்கி வருவதால் மக்கள் தமது இல்லங்களைவிட்டு வெளியேறிவருகின்றனர் என்று கூறிய ஜனப் முகமட் பக்தியாமல் என்ற இந்த ஆப்கானில்தான் தலைவர் தமது நாட்டில் சோவியத் துருப்புக்கள் தலையிடுவது பற்றி குரல் கொடுக்கவேண்டி இருந்ததாலேயே தாம் அவ்வாறு பேசியதாகக் கூறினார். (கு)

# இஸ்ரேல் அதிபரின் எகிப்திய விஜயம்!

பெல்கிரெட்,அக்,26

ராஜாங்க விஜயமொன்றினை மேற்கொண்டு இஸ்ரேல் அதிபர் இன்று எகிப்து வருகிறார்.

பாலஸ்தீனர்களுக்குசுயாட்சி வழங்குவதில் இருநாடுகளுக்குமிடையே கருத்து வேறுபாடு நிலவும் இவ்வேளையில் இஸ்ரேல் அதிபரின் இந்த விஜயம் உலக அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது.

இருநாடுகளுக்குமிடையிலான பரஸ்பர உறவு சகஜ நிலைக்கு திரும்புவதைக் குறிக்குமுகமாகவே இந்த விஜயம் அமைவதாக எகிப்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

12 லட்சம் பாலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்குவது குறித்தும் ஜெருசலத்தின் நிலை குறித்தும் எழுந்த கருத்து வேறுபாடுகாரணமாக எகிப்து ..... இஸ்ரேல் சமாதான முயற்சிகள் சிலமாதங்களாக தடைப்பட்டிருந்தது. (கு)

### சுயஸ்கால்வாய்க்கு கீழாக சுரங்கப்பாதை

பெல்கிரேட், அக்.26

சுயஸ் கால்வாய்க்குக் கீழான்சுரங்கப்பாதையைஎகிப்திய அதிபர் திரு. அன்வர் சதாத் நேற்றுத் திறந்து வைத்தார்.

ஒரு மைல் நீளமுள்ள இக் கால்வாய் ஆபிரிக்காவையும் ஆசியாவையும் இணைக்கின்றது. (கு)

### இரு வீடமைப்புத் திட்டங்கள்

(மட்டக்களப்பு)

தேசிய வீடமைப்புத்திட்ட அதிகார சபை நேரடி நிர்மாணத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள சின்ன ஊறணி, புதூர் ஆகிய கிராமங்களில் முப்பது வீடுகளைக் கொண்ட இரு வீடமைப்புத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படவுள்ளன. (அ)

### திருடிய பொருட்களுடன் கைது

(பண்டத்தரிப்பு)

களவாடப்பட்ட உடுபுடவைகளுடன் கையும் மெய்யுமாக ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. தில்லன் துரையினால் கைது செய்யப்பட்ட ரப்பியல் துரை என்னும் நபரை யாழ். நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்த போது நீதிபதி அவரை அடுத்த மாதம் 4-ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார். ஆனைக்கோட்டையைச் சேர்ந்த ஒருவரின் சைக்கிள் பாக்கில் வைக்கப்பட்டிருந்த புதிய உடுபுடவைகளை மேற்படி நபர் களவெடுத்துக்கொண்டு ஓடிச்செல்கையில் வீதி வழியாக ஜீப் வண்டியில் வந்து கொண்டிருந்த ஆனைக் கோட்டைப் பொலிஸ் சார்ஜண்ட் திரு. தில்லன் துரை அவரை சந்தேகத்தின் பேரில் வழிமறித்து விசாரணை நடத்திய போது இத்திருட்டு விபரம் வெளிப்பட்டதாம். இதனை அடுத்து அவரைப் பொலிஸ் நிலையம் கொண்டு சென்று முறைப்பாட்டை எடுத்துவிட்டு யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது நீதிபதி திரு. ரி. ஜோகநாதன் அவரை அடுத்த மாதம் 4-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ)

### நகைகள் கொள்ளை வழக்கு: 4 பேரில் இருபெண்கள் பிணையில் சென்றனர்

(பண்டத்தரிப்பு)

நவாலி குருக்கள் மடத்தடியிலுள்ள வீடு ஒன்றில் பட்டப் பகல் வேளையில் 36 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் மற்றும் பொருட்களையும் கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டி ஆனைக் கோட்டை பொலிசாரினால் கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு சந்தேக நபர்களில் இரு பெண்களை 2000 ரூபா பிணையில் செல்ல யாழ். நீதிமன்றநீதிபதி அனுமதித்தார்.

சந்தேக நபர்களான சோதிப் பிள்ளை, பாக்கியம் ஆகிய இரு பெண்களுமே இவ்வாறு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்கள். ஏனைய சந்தேக நபர்களான அம்பலம், திருச்செல்வம் ஆகியோரை இம் மாதம் 28ம் திகதி வரை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி திரு. ரி, ஜோநாதன் உத்தரவிட்டார். இவர்கள் இருவர் மீதும் வேறும் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டிருப்பதால் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்படவேண்டும் என்று பொலிஸ் தரப்பில் ஆஜரான ஆனை கோட்டை சார்ஜன்ட் திரு. தில்லன் துரை தெரிவித்ததை அடுத்து நீதிபதி இவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடடார்.

### பரு. – ஆழியவளை பஸ்சேவை சீர்கேடுபற்றி எம். பி. யிடம் புகார்

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை - ஆழியவளை பஸ் சேவையின் சீர்கேடுபற்றி பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்திடம் பலத்த ஆட்சேபனை தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெற்றிலைக்கேணியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மற்றும் பிரமுகர்கள் எல்லோரும் பருத்தித்துறை டிப்போவினால் நடத்தப்படும் பருத்தித்துறை -ஆழியவளை பஸ் சேவையின் சீர்கேடு பற்றியே தமது பேச்சில் பிரஸ்தாபித்து, எம். பி. யிடம் பல முறையீடுகளைத் தெரிவித்தனர்.

பருத்தித்துறை தொகுதியிலுள்ள ஆழியவளைக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பஸ் டிப்போக்களினால் நடத்தப்படுகின்ற சேவைகள் திருப்திகரமானதாக இருக்கின்ற வேளையில் பருத்தித்துறை டிப்போவினால் மட்டும் நடத்தப்படுகின்ற பஸ்சேவைகள் ஒழுங்கற்றனவாகவும், சேவைகள் இடைவழியில் தாளையடியுடன் நிறுத்தப்பட்டு விடுகின்றன எனவும் முறையீடு செய்துள்ளனர். (கு)

### ஐஸ் தொழிற்சாலை விரைவில் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் யாழ். முதலாம் குறுக்குத்தெருவில் அமைக்கப் பெற்ற ஐஸ்தொழிற்சாலை விரைவில் செயற்படவுள்ளது.

இதற்கான இயந்திரங்கள் வெளிநாட்டிலிருந்து வந்து சேர்ந்துவிட்டன.

(பச்சிலை-நி-கு)

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

(பச்சிலைப்பள்ளி)

அகில இலங்கைத் தமிழ் பேசும் உப தபாலதிபர்களின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நவம்பர் மாதம் 23 ம் திகதி கொழும்பு தபால்தந்தி அலுவலக 7 வது மாடியில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்திற்கு மேற்படி சங்கத்தின் தலைவர் திரு. ஐ. நடராசாதலைமை தாங்குவார்.

சங்கத்தின் யாழ். கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அடுத்தமாதம் 9 ம் திகதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (கு)


நம்பகமானவை ரவி பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்



நீண்ட தூரிகை மயிர்

கையாள்வது சுலபம்

உற்பத்தியாளர்கள்.
ரவி இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட்.

ஹேலீஸ் லிமிட்டெட்.
தாபனத்தின் துணை நிறுவனம்

கிடைக்குமிடங்கள்: க. பொ. கூ. விற்பனை நிலையங்கள், இரும்பு வியாபாரிகள்,
முன்னணி சில்லறை வியாபாரிகள் மற்றும்
...விற்பனை நிலையம், 40, கெயிசர் வீதி...

ரவி பெயின்ட்/வானிஸ் பிறஷ்கள்

| வடிவமைப்பு இல | அளவு | பிறஷ் ஒன்றுக்கு சிபாரிசு செய்த விலை |
|---|---|---|
| 001-1 | 1/2" | 5/75 |
| 001-2 | 3/4" | 6/75 |
| 001-3 | 1" | 8/70 |
| 001-4 | 1.1/2" | 11/70 |
| 001-5 | 2" | 18/40 |
| 001-6 | 2 1/2" | 24/00 |
| 001-7 | 3" | 28/70 |
| 001-8 | 4" | 39/00 |
| 001-9 | 5" | 46/70 |
| 001-10 | 6" | 57/25 |

Mel Ads


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

உயிர்களின் தோற்றம், இருப்பு, ஒடுக்கம் ஆகியவை மாயையின் காரியமே.
—சுவாமி சிவானந்தர்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# அமெரிக்க அரசியல் அமைப்பும் ஜனாதிபதியின் அதிகாரங்களும்

உலகில் பல நாடுகளில் ஜனாதிபதிகள் இருக்கிறார்கள். இவர்கள் எவருக்குமில்லாத தனி அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதிக்கு இருக்கின்றது. வெள்ளை மாளிகைக்குச் செல்லும் ஜனாதிபதியும் அவர் குடும்பத்தினரும் உலகில் முதல் மனிதர்களாகக் கருதப்படுகின்றனர். ஒரு ஜனாதிபதி வதிகாரம் மிக்கவராக இருக்கிறார் என்றால் அவர் நிச்சயம் அமெரிக்க ஜனாதிபதியாகத்தான் இருப்பார். உலகில் பலம் வாய்ந்த நாட்டின் ஜனாதிபதியென்பதால் அமெரிக்க ஜனாதிபதியின் முடிவுகளை உலகம் கவனத்துடன் எதிர்பார்த்திருக்கும். அவருக்கிருக்கும் அதிகாரம்போல் வேறெந்த ஜனாதிபதிக்கும் இன்றில்லை.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் சமீபத்தில் நடக்க இருக்கின்றது. இங்கு ஜனநாயகக் கட்சி வேட்பாளரும் குடியரசுக் கட்சி வேட்பாளரும் மாறி மாறி ஜனாதிபதியாக வருகின்றார்கள். இத்தடவை குடியரசுக் கட்சி வேட்பாளராக திரு. டொனல்ட் றீகனும் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக திரு. ஜிம்மி காட்டரும் போட்டியிடுகின்றனர். இவர்களில் யார் வெற்றிபெறுவார் என்பதில் திடமான முடிவைச் சொல்லமுடியாமலிருக்கின்றது. இருவரும் மிகவும் செல்வாக்குடன் இருக்கும் இந்நேரத்தில் ஜனாதிபதிக்கிருக்கும் அதிகாரங்களையும் அந்நாட்டு அரசியல் அமைப்பையும் சுருக்கமாக அறிவது பயனுள்ளதாக இருக்கும்.

### 35 வயதுக்கு மேற்பட்ட எவரும்போட்டியிடலாம்

அமெரிக்காவின் ஆட்சிமுறையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தலைவர் தாம் முதல்வர். இவரை ஜனாதிபதி என அழைப்பர். இவர் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுவார். ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படும்

**- புத்தொளி -**

தலைவர் மக்கள் விரும்பினால் எத்தனை முறையும் தேர்ந்தெடுக்கப்படலாம். ஆனால் 1940ம் ஆண்டில் மட்டும் ஒருதலைவர் மூன்று தடவைகள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தான் ரூஸ்வெல்ட் என்ற அமெரிக்க ஜனாதிபதியாகும் தலைவர் பதவிக்கு முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட அமெரிக்க வாக்காளர் எவரும் போட்டியிட சட்டம் இடமளிக்கின்றது.

தலைவர் மககளால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராட்களால் தான் அவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றார். ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பல பிரிவுகளிலிருந்து எத்தனை உறுப்பினர்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்களோ, அதே எண்ணிக்கையுள்ள உறுப்பினர் தாம் அப்பிரிவினின்றும் தலைவரைத் தேர்ந்தெடுக்கவும் அனுப்பப்படுகின்றனர்.

கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுப்பதும் இதேபோல்தான் ஜனாதிபதி மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் முறைதான் இலங்கை அரசியலமைப்பில் இருக்கின்றது. அமெரிக்காவில் அப்படியல்ல. தலைவன் சிறந்தவர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். சிறிய செய்திகளுக்காகவெல்லாம் எண்ணத்தைப் பறிகொடுக்கும் கட்சிகளின் கட்டுப்பாட்டிற்காகக் கருத்தை இழக்கும் பொதுமக்களுக்குத் தலைவர் தேர்தலில் இடமளிப்பது, நல்லவண்ணப்படங்களின் தன்மையைக் கூறக் குருடர்களை அழைப்பது போல் இருக்கும்'' என்பது அங்குள்ள அரசியல் அமைப்பை வகுத்தவர்களின் கருத்தாகும்.

### ஜனாதிபதியின் அதிகாரம்

நாட்டின் ஆட்சித்துறைத் தலைவர் ஜனாதிபதி தான். ஆட்சித்துறை அலுவலாளர்களை அமர்த்துவது இவரேயாகும். ஆனால் இவ்வேலையை அவர் செய்யும் பொழுது செனட் சபையின் அனுமதியைப்பெறவேண்டும். அனுமதியை கேட்பதுடன் நின்றுவிடமுடியாது. அதன் ஒப்புதலையும் பெறவேண்டும். ஆனால் அரசு அதிகாரிகளை நீக்குவதற்குச் செனட்சபையின் அனும வேண்டியதில்லை. இவரே நாட்டின் படைகளின் தலைவராவார். வெளிநாட்டு நடவடிக்கைகளில் அளவில்லாத அதிகாரமும் செல்வாக்கும் பெற்றவர் ஜனாதிபதி. ஆனால் வெளிநாடுகளுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கைகளுக்குச் செனட்டின் ஒப்புதல் பெறவேண்டும்.

பிறநாடுகளுடன் போர் தொடுப்பதற்குச் சட்டசபைக்கன்றி இவருக்கு அதிகாரம் கிடையாது. எனினும் வெளிநாட்டு அலுவல்களை 'போர் தேவையானது' என்று சட்டசபை தீர்மானிக்கும் அளவுக்குக் கருத்துக்கூற இவரால் முடியுமாதலால், அந்த அதிகாரமும் இவரிடத்தில் தான் இருக்கின்றது.

இங்கிலாந்தைப்போல் அமெரிக்காவில், ஆட்சித்துறைக்கும் சட்டசபைக்கும் நெருங்கிய தொடர்பு கிடையாது. தலைவர் சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. தேசத் தலைவர் சட்டசபையின் உறுப்பினருமில்லை. சட்டசபையால் ஜனாதிபதியை பதவியினின்றும் நீக்கவும் முடியாது. ஜனாதிபதியின் காலம் நான்கு ஆண்டுகள் என வரையறுக்கப்பட்டுள்ளது, தலைவர் சட்டசபைக்குப் போகவேண்டிய கட்டாயமும் கிடையாது. ஆகவே சட்டசபையில் மசோதாவைக் கொண்டு போகும் அதிகாரமும் இவருக்கில்லை. சட்டசபையைக் கூட்டவோ, கலைக்கவோ, எமர்ஜன்சி அல்லாத நேரத்தில் தலைவரால் முடியாது.

(1) ஜனாதிபதி சிறப்பான சில காலங்களில் சட்டசபையைக் கூட்டுகின்றார்.

(2) தான் விரும்பும் மசோதாவை, சட்டசபை உறுப்பினர் எவர் மூலமாவது சட்டசபைக்குக் கொண்டுவருவார்.

3. சட்டசபை அனுமதித்த மசோதாக்களைத் தலைவர் மறுக்கலாம். மசோதா தனக்கு அனுப்பப்பட்ட 10 நாட்களுக்குள் தன் மறுப்பைத் தலைவர் தெரிவிக்க வேண்டும். தலைவரால் மறுக்கப்படும் மசோதாக்கள் சட்டமாக ஆக்கப்படவேண்டுமாயின், மறுபடியும் சட்ட சபையில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

### நீதித்துறை

அமெரிக்க ஜனாதிபதி சில வழக்குகளில் மன்னிப்பளிக்கும் அதிகாரம் பெற்றிருக்கிறார். இங்கு இங்கிலாந்திலுள்ளது போல் 'கபினெட்' எனப்படும் அமைச்சரவை கிடையாது. பல்வேறு ஆட்சித்துறைக் கவர்னர்களை ஒன்று கூட்டி ஜனாதிபதி ஆட்சி விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடுவார். ஆனால் அவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு அவருக்கு இல்லை. சேர் ஹென்றி மெயின் என்பவர் அமெரிக்க ஜனாதிபதியைப் பற்றித் தெரிவிக்கும்போது ''ஆங்கில நாட்டு மன்னர் ஆள்கிறார்; அதிகாரம் செய்யவில்லை; பிரான்சு நாட்டுத் தலைவர் அளவும் இல்லை; அதிகாரம் செய்வதுமில்லை; அமெரிக்க ஜனாதிபதி ஆளவில்லை; ஆனால் அதிகாரம் செய்கிறார்,'' என அழகாகக் கூறியுள்ளார்.

### சட்டசபை

அமெரிக்காவின் சட்டசபை இரு பாவுகளை உடையது. ஒன்று பொது மக்கட் பேராட்

(8-ம் பக்கம் பார்க்க)

## நமது நோக்கு

### ஆங்கில மக்களின் அவலநிலை

சூரியன் என்றுமே அஸ்தமிக்காத ஏகாதிபத்தியத்தை நூறுஆண்டுகளுக்கு மேல் 'கட்டிஅவிட்ட' பிரிட்டன் இன்று பஞ்சபடாப் பாடுபடுகின்றது.

குடியேற்றநாடாகவிருந்த போது இலங்கை பிரிட்டிஷாருக்கு ஒரு தேயிலைத் தோட்டம்போல் சிலகாலம் காட்சியளித்தது. தாய்நாட்டில் வேலைக்குத் தகைமையில்லாதவர் பலர் இங்கு பெரும் பதவிகள் வகித்தனர். இன்று இலங்கையர்-இந்தியர் உட்பட பல ஆசிய மக்கள் அங்கு ஆயிரக்கணக்கில் தொழில்புரிகின்றனர், குடியேறியிருக்கின்றனர்.

அகிலஉலகத்திலும் முதல் நம்பர் எஜமானாகவிருந்த பிரிட்டன் இன்று பல இன்னல்களுக்கு ஆட்பட்டு அவஸ்தைப்படும் நிலைமையை எங்கள் நாட்டு மக்கள் நேரில்கண்டு அனுபவிக்கின்றனர். காலத்தின் கோலம் இது!

கான்சவேட்டிவ் கட்சி சென்ற வருடம் தொடக்கம் ஆட்சியிலிருந்து வருகின்றது அதன்தலைவி திருமதி தாச்சர் பிரிட்டனின் முதலாவது பெண் பிரதமர் ஒரு வருட ஆட்சியை முடித்து நாட்டின் அரசியல், பொருளாதார நிலைமையை வருடாந்த மாநாட்டில் விளக்கியிருக்கிறார்.

அவருடைய தலைமையுரையை விமர்சித்த 86 வயது நிரம்பிய தொழிற் கட்சியின் முன்னைநாள் தலைவர் ஹரல்ட் மாக்மில்லன் பிரிட்டனின் இன்றைய பரிதாபநிலைமையை, 40 வருடங்களுக்குமுன் நாட்டை ஜெர்மனியின் ஹிட்லர் துன்புறுத்திய நிலைமைக்கு ஒப்பிட்டிருக்கிறார். அவ்வளவு மோசமான கட்டம் தவிர்க்கக்கூடியதொன்றாயினும், உலக சமுதாயத்தில் பிரிட்டன் மீண்டும் தலையெடுப்பது அசாத்தியமென்பதே முதுபெருந்தலைவரின்முடிவு.

பணவீக்கம், இருபது லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வேலையின்மை; வர்த்தகம் தொழிற்துறைகள் பல ஒடுங்கிச் சுருங்கி வரும்அபாயம்; பொதுநலச் சேவைகள் பல நீக்கப்பட்டும் குறைக்கப்பட்டும் வருங்கொள்கைகள்; இவை போன்ற பல தாங்கொணாத் துன்பங்கள் மக்களை வாட்டி வருகின்றன.

பாதிக்கப்பட்டவர்கள் தொழிலாளர் மட்டுமல்ல, முதலாளிகளுமே என்றால் நிலைமையின் விசித்திரம் என்னே! வேலையில்லாமை சம்பளம் பற்றாமை தங்களை வருத்துகின்றன என்று ஓலமிடுகின்றார்கள் தொழிலாளிகள். தொழிலுக்குரிய வசதிகள் அற்று, வேண்டிய உற்பத்தி குறைந்து தங்கள் மூலதனத்திலிருந்து செலவு செய்து சீவிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்ற கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள் தொழிலதிபர்கள்.

''கொள்கையில் மாற்றம் எதுவுமில்லை; 'திரும்பிப் பார்' என்பது எமது அகராதியில் இல்லாத சொற்றொடர்'' என்று திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார் பிரிட்டனின் 'இரும்புப் பெண் பிரதமர்' தாச்சர். திடமான கொள்கை வேறு; பிடிவாதம் வேறுஎன்று அவருடைய அமைச்சரவையின் சில சகாக்கள் கருதுகின்றனர். விஷம்போல ஏறும் சமுதாய எதிர்ப்பு வெடித்துவிடுமோ என்று பல அரசியல் அனுபவசாலிகள் அஞ்சுகின்றனர்.

எதற்கும் அஞ்சாத பிரதமர் தாச்சர், தற்சமயம் ஆரம்பிக்கும் மாரிகாலம் கழிந்ததும் நிலைமை சீராகும் என்ற நம்பிக்கையை தெரிவித்ததுடன் கடமையே கண்ணாயிருக்கும் ஆங்கில மக்கள் தங்கள் மன உறுதியாலே இன்றைய 'இயமபயத்தை'த் வென்றெடுக்க வேண்டுமெனக் கோரியிருக்கிறார்.

ஜனநாயக மரபைக் கட்டுப்பாட்டுடன் வளர்த்து வந்து, அச்சிறந்த அரசியல் முறையை தங்கள் ஆட்சியிலிருந்து, சுதந்திரம் பெற்ற பல நாடுகளுக்கு அறிமுகப்படுத்திய பிரிட்டன் இன்று என்றுமில்லாத அரசியல் அவலத்தில் அகப்பட்டுள்ளது.

இன்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டால், மிக முதிர்ச்சியுள்ள சாதாரண பிரிட்டிஷ்பிரஜைகள் பெரும்பான்மையினர் தாச்சா அரசாங்கத்துக்கு சாவுமணி அடிப்பரென்பது நிசம். ஆயினும் இவ்வித புரட்சி மனப்பாங்கு அந்த சமத்துவ புத்திபடைத்த மக்களுக்கு இயல்பாகவில்லை.

எனவே இன்னும் நான்கு வருடங்களுக்கு அவர்களின் கதி என்ன? ஒன்று ஆளுங் கட்சியில் பிளவு இருப்பதாலும் பொதுமக்கள் எதிர்ப்பு அதிகரித்து வருவதாலும் தலையை வெட்டுவேனென்ற தாச்சர் அம்மா உண்மையில்தலைப்பாகையைத் தட்டி விடுவதுடன் நின்றுவிடக் கூடுமென்ற நம்பிக்கை.

மற்றையது நாலுவருடம் அவ்வாறு, நீடிக்கக் கூடிய ஆட்சி, அடுத்த பொதுத் தேர்தலில் எவ்வாறு மாறும்? தொழிற் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளது. பல மார்க்ஸிய இடதுசாரிகள் கட்சிக்குள் புகுந்து செல்வாக்குள்ள இடம் பெற்றிருக்கின்றன. இவர்களுக்கு எதிரே, கட்சியில் வலதுசாரி, மிதவாதி வர்க்கங்கள் பலம் பெற்றிருக்கின்றன. பிடிவாதமான போக்கில் இன்றைய ஆட்சி போகுமானால், தொழிற்கட்சி தீவிரமான போக்குடன் ஆட்சிக்கு வருமென அஞ்சப்படுகிறது.

எங்கள் நாட்டுக்கு அரசியல் குருவாக அமைந்திருந்த பிரிட்டன் எங்களைப் போல சிக்கல்நிலையில் இருப்பது சரித்திரத்தின் சுவையான சோகமான பாடம். இருகட்சி ஆட்சி, தான் ஜனநாயகத்தின் சிறப்பு. ஆனால் இன்றைய நிலையென்ன? இவர் போனால் அவர் வருவார் என்ற அச்சம். அவர் பலவீனப்பட்டால் இவர் நிலைத்துவிடுவார் என்ற அச்சம்.

எவ்விதத்திலும் சர்வாதிகாரம் இயம விலங்கு!

## மக்கள் கருத்து

### நயினாதீவு— குறிகாட்டுவான் படகுச்சேவை

நயினாதீவுக்கு வருகைதரும் இந்து-பௌத்த யாத்திரீகர்கள் மற்றும் பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு மோட்டார் படகுச் சேவையைச் சீர்திருத்தி வசதி செய்யும் முகமாக 13-10-80 திங்கள் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரும், மாவட்ட அமைச்சின் செயலாளருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி தலைமையில் யாழ் கச்சேரியில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அத்தருணம் யாழ். உதவி அரசாங்க அதிபர் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர், மராமத்துப்பகுதி பொறியியலாளர், நயினாதீவு அபிவிருத்தி மன்றம், நயினாதீவு கிராமமுன்னேற்றச் சங்கம், மாதர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிகளும் சமுகமாயிருந்தனர்.

அத்தருணம் கீழ்க்காணும் ஆலோசனைகள் நடாத்தப்பட்டது, நயினாதீவு- குறிகாட்டுவான் இடங்கட்கு இடையே அரசாங்க மோட்டார் படகுச் சேவையை நடத்த வேண்டுமென்றும், தனியார்துறை மோட்டோர் படகுகளின் சேவை தொடர்பான பல்வேறு குறைபாடுகளை திருத்தம் செய்யவேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானமாயிற்று.

அரசாங்க மோட்டார் படகுச் சேவையை இரு இடங்களுக்கும் இடையே 1981ஜனவரியில் செயல்படுத்தலாமென கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டது. தனியார் துறை மோட்டர்ப் படகுகளின் உரிமையாளர்களையும் உட்படுத்திய இன்னொரு கூட்டம் 21-10-80 ல் நயினாதீவில் தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. குணநாயகம் தலைமையில் நடைபெற இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

இப்படகுச் சேவையை சீர்திருத்துவதுடன் அரசாங்க படகுச் சேவையும் தொடங்க உத்தேசித்துள்ள அரசாங்க அதிபர் திரு யோகேந்திரா துரைசுவாமியை கூட்டத்தினர் பாராட்டியதுடன் கூட்டம் நிறைவெய்தியது.

வே. குலசேகரம்
செயலாளர்
அபிவிருத்திமன்றம்.
நயினாதீவு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசியல் விஞ்ஞானம்

# அரசுக்கு உயிருட்டும் இறைமை

அரசுடையகூறுகளில் முக்கிய மானதும் அரசுக்கு இயக்க சக்தியை அளிப்பதுமான 'இறைமை' (Soverignt ) பற்றி இன்று சிறிது சிந்திப் போம். இறைமை பற்றி பல அரசியல் அறிஞர்கள் பலதரப் பட்ட வரைவிலக்கணங்களை வகுத்துள்ளனர். அவற்றில் முக்கியமான சிலவற்றைத் தொகுத்து நோக்குவதன்மூலம் இறைமை பற்றி ஓரளவுவிளங் கிக்கொள்ள முடியும்,

பிரான்சிய அரசியல் அறி ஞர் ஜீன்போடினன் (Jean Badein) வரைவிலக்கணப்படி "குடிமக்கள் மீதும் சாமான் யர்மீதும் சட்டத்தால் கட்டுப் பாடின்றி அதிகாரம் செலுத் துவதே இறைமை" ஆகும் ஹொப்ஸ், லொக், ரூசோ போன்ற பல அறிஞர்கள் அவர்கள் வாழ்ந்த காலத்து அரசியல் சூழல்களை மைய மாகக்கொண்டு பலவிதமான விளக்கங்களை இறைமைக்கு அளித்துள்ளனர். அவற்றுள் ஜோன் ஒஸ்ரின் (John Austin) இன் "பிறருக்கு பணி யாத வல்லமையுடைய குறிப் பிட்ட ஒருவர் உத்தரவுகளைச் சட்டங்கள் ஆக்கிப் பெரும் பான்மை மக்களைப் பணிய வைப்பதும், அவரது முழுமை யானதும் வரையறையற்ற தும் பிரிக்க முடியாததுமான அதிகாரமே இறைமை என்ற கூற்று முக்கியமானது. எனவே வரம்பற்ற முறையில் குடிமக் கள் மீது அரசு செலுத்தும் அதிகாரமே இறைமை என் பது தெளிவாகின்றது. அரசு இறைமையை பிரயோகிக்கும் கருவியாக சட்டங்கள் காணப் படுகின்றன. அரசின் இறை மையும் அந்த இறைமையைப் பிரயோகிக்கும் அரசியல் சட் டங்களும் மேலானவை. அவற் றைக் கட்டுப்படுத்தும் அதி காரம் அரசுக்கு உள்ளேயும் வெளியேயும் கிடையாது. அர சின் செயல்களைச் சட்டமன் றம் ...... ஆட்சித்துறை ...... நீதித் துறை என்பன வெளிப்படுத் தினுலும் கூட இவற்றில் எதுவுமே தனிப்பட்ட முறை யில் மேலான அதிகாரத்தை பெற்றிருக்கவில்லை. அரசுதான் தனிப்பட்ட முறையில் அந்த இறைமை எனும் மேலான சக்தியைக் கொண்டுள்ளது.

இறைமை (I) வரம்பில்லா தது (Absolut ness) (II) பொது வானது (Universality) (III) பறிக்கப்படமுடியாதது (Inalienable) (IV) நிலையானது (Permanence) (V) பிரிக்கமுடி யாதது (Indivisiblity) (VI) தனித்துவமானது (Individua- lity) எனும் தன்மைகளைக் கொண்டுள்ளது.

இறைமை, அரசில் வாழும் அனைவரையும் கட்டுப்படுத்து கிறது என்பதால் வரம்பில் லாதது எனப்படுகிறது ஆனுல் இதற்கு நடைமுறையில் சில வரையறைகள் உண்டு. சர்வ தேச சட்டத்தால் அரசுக்கள் பெயரளவில் எங்கிலும் கட் டுப்படுகின்றன. அவ்வாறே தனிமனித உரிமைகளில் பெரும்பாலான் அரசுக்கள் தலையிடுவதில்லை. இறைமை எல்லோரையும் கட்டுப்படுத்து வதால் பொதுவானது எனக் கூறப்படுகிறது. எந்த அரசும் இறைமையை இழந்தபின் அதனை அரசு எனக் கூறமுடி யாது. ஆதலால் பறிக்கப் படமுடியாதது இறைமை எனப்படுகிறது. லிபரின் கூற் றுப்படி 'இறைமை அரசுக்கு உயிர் போன்றது. உயிர் பிரிந்துவிட்டால் உடல் அழி வதுபோல இறைமையை இழந்துவிட்டால் அரசும் அழிந்துவிடும்.' ஒரு அரசின் நிலப்பரப்பின் ஒரு பகுதியை வேறு ஒரு நாடு கைப்பற்றி விட்டால் அரசு தனது இறை மையை இழப்பதில்லை. அந்த நிலப்பகுதியின் மீது தனக்கி ருக்கும் உரிமையையே இழக் கிறது. அவ்வாறே அந்நியர் ஆதிக்கத்துக்கு உட்படும் இரு அரசுக்கள் அந்நியரால் நிர் வாக வசதிக்காக ஒரு அர சாக்கப்பட்டாலும் சுதந்திரம் மீள்கையில் அவை தனித்தனி இறைமையுள்ள அரசுக்களா கவே இருக்கும். இதுவே இலங்கைத் தமிழர்கள் தனி நாட்டை அல்ல இழந்த நாட்டையே பெறப் போராடு கிறுர்கள் என்பவர்களின் தாரக மந்திரமாக உள்ளது. இறைமை அரசாங்கங்கள் மாறுவதால் மாறுவதில்லை என்பதையே இறைமை நிலை யானது என்கிறேம். இறை மையைச் சட்டமன்றத்துக்குச் சட்ட அமுலாக்கத்துக்கு எனப் பல வகையாகப் பிரிக்கமுடி யாது. இதனையே பிரிபடா தது இறைமை என்கிறேம். ஏனெனில் ஓர் அரசுக்கு இறைமை ஒன்றுமட்டுமே உண்டு. அது பிரிக்கப்பட் டால் இரு அரசாகக் கருதப் படும், இறைமை பெறும் ஒவ்வொரு அரசிலும் அந்த இறைமையே மேலானது என் பதையே இறைமை தனித்துவ மானது எனக் கூறுகிறேம்.

இனி இறைமையின் தோற் றங்களான சட்ட இறைமை (Legal Sovereignty) அரசியல் இறைமை (Political Sovereig- nty) மக்கள் இறைமை (Popu- lar Sovereignty) பெயரளவு இறைமை, பற்றி எடுத்து நோக்குவோம். (தொடரும்)

## அறிவியல் பூஞ்சோலை

— பற்றிமாகரன் —

# தமிழில்வேற்றுமை

(தொடர்ச்சி)

வேற்றுமைகள் உருபொலி யனியல் Morphophonemics) ரீதியில் மொழியியலில் எடுக் கப்பட்டு ஆய்வு செய்யப்படு வதால் வேற்றுமை பற்றிய பல மயக்கங்கள்தீர வழி பிறக் கிறது. ஆயினும் தமிழில் வேற்றுமை எனும் இக்கட்டு ரையை முடிக்கு முன் ஆறும் வேற்றுமை பற்றியும் வேற்று மைகள் வாக்கிய அமைப்பில் எத்தகைய ஒழுங்கமைப்பை காட்டுகின்றன என்பன பற்றி யும் வேற்றுமை உருவாக்கல் பற்றியும் சிறிது பார்ப்போம்.

பொதுவாக வேற்றுமைக்கு கூறப்பட்ட பொருள்களை வேற்றுமை உருபுகள் உணர்த் தவில்லை. முடிக்குஞ் சொற்க ளாகிய வினைச்சொற்களே உணர்த்துகின்றன ஆனுல் ஆறும் வேற்றுமையை பொறு த்தவரை ஆறும் வேற்றுமை ஏற்ற பெயர்ச் சொல்லுக்கும் பயனிலைச் சொல்லுக்கும் எந்த வித தொடர்புமில்லை, ஆறும் வேற்றுமைச் சொல் இன்னொரு பெயர்ச் சொல்லுக்கு அடை யாகவே இடம் பெறுகிறது. இதனை யோகேஸ்வரி கணேச லிங்கம் 'வேற்றுமையும் சொல் லொழுங்கும்'' எனும் கட்டு ரையில் மரப்படங்கள் மூலம் எளிதாக விளக்குகிறுர்.

| 01. கண்ணன் | கத்தியை | முறித்தான் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| இதனை 2 | 1 | 3 |
| 3 | 1 | 2 |
| 2 | 3 | 1 |

எனஎழுதலாம்., ஆனுல்

| | கத்தியினது | பிடி | முறிந்தது |
|---|---|---|---|
| | 1 | 2 | 3 |
| என்பதை | 3 | 1 | 2 |

முறிந்தது கத்தியினது பிடி

என்று மட்டுமே மாற்றலாம்:

உலகமொழிகள் பெரும்பா லானவற்றில் உடைமை வேற் றுமை (Gentive Case) தற் கிழமை பிறிதின் கிழமை என் னும் பொருள்வேறுபாட்டினை குறித்து நிற்கின்றது உதார ணத்துக்கு

JOHN'S HAND
JOHN'S BOOK

இவ்வாறு ஆறும் வேற்றுமை உருபேற்ற தமிழ்ச் சொல்லுக் கும் அதைத் தொடர்ந்துவரும் பெயர்ச் சொல்லுக்கும் இடையே பிரிக்க முடியாத நெருங்கிய தொடர்பு இருப்ப தன் காரணமாக வாக்கிய ஒழுங்கு மாறுபடும்பொழுது அவை இரண்டும் ஒன்முகவே மாறக்கூடியன. ஆனுல் ஏனைய வேற்றுமைகளில் இந்நிலை காணப்படுவதில்லை.

அவ்வாறே ஆறும் வேற் றுமை உருபை அடுத்து உயர் திணைப் பெயர் இடம் பெறாது அவ்வாறு உயர்திணைப்பெயர் இடம்பெறின் 6ம் வேற்றுமை உருபை ஏற்கும் பெயருக் உயர்திணையாக அமையவேண் டும்

ஆறு வேற்றுமைவருகின்ற அடுக்குச்செ ற்கள் இடம்பெறும் வாக்கியங்களும் பெயர்ப் பய னிலையுடனேயே முடிகின்றன.

உ+ம் அருவியது சலசல என்ற ஓசைகாதில் விழுந்தது. ஆறும்வேற்றுமை உருபை ஏற்ற பெயர்ச்சொல் நிச்சய மாகப் பிறிதோர் வேற்றுமை உருபை ஏற்றபெயர்ச்சொல்லை ஏற்றபின்பே பயனிலையை ஏற் பதைக்காணக்கூடியதாக உள் ளது.

### பொருள் மயக்கம்

அதேபோல் அது என்பது ஒன்றன் பால் விகுதியிலிருந்து வந்த உருபு என்பதால் யாது தீது என்பவற்ரேடு இவ் உருபு சேர்வதில்லை. மேலும் உடைய என்பது உடை என்ற வினையி லிருந்து பிறந்த பெயரெச்சத் திலிருந்து வந்து பெயர்+ஐ +உடைய என அமையும் தொடரும் பெயர்+உடைய என அமைந்த தொடரும் காலப்போக்கில் உடைமை மயக் கமடைவதைக்காணலாம்.

உ+ம் தென்ருநிடைய சிவன் தென்னுடு சிவனை உடையது சிவன் தென்னுடு உடையவன் என இருள் பொருள் மயக்கு வதைக் காணலாம். பெயர்களில் உடைய என்ற சொல்லை உள்ள என்ற சொல் ஈடுசெய்வதால் 'உடைய' என்ற சொல் ஒன்று பெய ரெச்ச கிளவி போல வினையாற் றவும் இன்னொன்று வேற் றுமை உருபு போல பணியாற் றவும் செய்கிறது என்பது டாக்டர் பொற்கோவின் கரு த்து.

### ஒரே உருபு தொடர்தல்

நான்காம் வேற்றுமை உரு பாகியகுவும் ஆறும்வேற்றுமை உருபாகிய அதுவும் தொடரில் அடுத்து அடுத்து வரக்கூடிய தாக அமைவது மரபு.

ஊருக்கு கலியாணத்திற்கு போனுன்

கண்ணனது மனைவியது சேலை.

அதே நேரம் பேச்சு வழக்கில் ஒரே வேற்றுமை உருபுகளில் தொடர்வது வழமையாக காணப்படுகிறது.

உ+ம் அவனிட்டைக் காதைக் கேட்டான்.

### வேற்றுமை உருவாக்கம்

மொழியின் புற அமைப்பில் ஏற்படுகின்ற அளவுக்கு அக அமைப்பில் மாற்றங்கள் ஏற் படுவது இல்லை என்பது உண் மையே. ஆனுல் மாற்றங்கள் ஏற்படுவதே இல்லை என்று கூறமுடியாது. ஏனெனில் ஒரு மொழி எனும் நாணயத்தின் இரு பக்கங்களில் ஒன்று பேச்சு மற்றது எழுத்து. இதற் கேற்ப வேற்றுமையிலும் புதிய வேற்றுமை உருபுகள் உருவா கவே செய்கின்றன.

''ஆக' என்பதை நிலைப் பொருளில் கண் கால்........... எனும் சொல்லுருபுகளோடு ஏழாம் வேற்றுமையாக டாக் டர் பொற்கோ நிறுவிக் காட் டுகிறுர். அவ்வாறே வேற்று மையும் சொல்லொழுங்கும் எனும் கட்டுரையில் யோகேஸ் வரி கணேசலிங்கம் உடைமைப் பொருளை உணர்த்த ன்ர (உ+ம். அவனின்ர வீடு) என் னும்சொல்உருபு6ம்வேற்றுமை யாகப் பேச்சுத் தமிழில் பயன் படுவதைச் சுட்டிக்காட்டுவ தோடு உக்கால (வளவுக்கால வந்தான்) உருபும் குவுக்கு பதி லாக 'என்று' (சோதனைக் கென்று படித்தான்) உருபும் இடப்பொருளில் ஐ உருபும் (பாலுக்கை தண்ணீரை ஊற் றினுன்) வழங்குவதை குறிப் பிடுகின்றுர். இவை புதிய ........ தொகுதியாக மிளிர்கிறது.

முற்றும்

# தேசிய வருமானம் ஒரு கண்ணேட்டம்

- எஸ். எஸ். தங்கராசா

மேற்படி சில அம்சங்களை மேலெழுந்த வாரியாகப் பார்த்ததன் பின்பு தேசிய வருமானத்தை கணிப்பிடும் மூன்று வழிகளையும் சுருக்கமாகப் பார்க்கலாம்.

### உற்பத்தி வழி

உற்பத்தி வழியில் தேசிய வருமானத்தைக் கணிப்பி டும்பொழுது உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்ட ஒவ்வொரு துறைகளையும் அதாவது விவசாயம், கைத்தொழில் கட்டிடம், சேவைகள் ஆகியவற்றின் உற்பத்திகளைத் தெரிந்து அவற்றின் பெறுமதிகளை தொகுத்தல் மூலம் அல்லது உற்பத்தியில் ஈடு படுத்தப்பட்ட உற்பத்தி சாதனங்களின் பெறுமதிகளைக் கூட்டுவதன் மூலம் தேசியவருமானப் பெறுமதியை அறியலாம். விவசாயம் முதலாம் நான் துறைகளையும் இலங்கை மத்திய வங்கி 11 துறைகளாக்கி அவற்றின் உற்பத்திகளின் பெறுமதி களை முதல் தொகுத்து தேசிய வருமானக் கணிப்பீட்டை வெளியிடுகின்றது. இவ்வுற்பத்தி வழியில் ஏற்படும் இரட்டைக் கணிப்பீடு என்ற தவறு ஏற்படாதிருக்கவே முடிவுப் பெறுமதி கள் தொகுக்கப்படுகின்றன. உள்நாட்டின் மொத்த உற்பத்தி களின் பெறுமதியுடன் வெளிநாட்டால் கிடைத்த தேறிய காரணி வருமானத்தைச் சேர்த்தல் மூலம் மொத்த தேசிய வரு மானத்தைப் பெற முடியும். இலங்கை மத்திய வங்கி மாதிரி யில் அமைந்த உற்பத்தி வழி கணிப்பிட்டு உதாரணமொன்று கீழே தரப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1. | விவசாயம், காட்டுத்தொழில் வேட்டையாடல் | — | 1000 M |
| 2. | தயாரிப்புத் தொழில் | — | 800 M |
| 3. | கட்டட ஆக்கம் | — | 35 M |
| 4. | சுரங்கம் அறுத்தல், பார்க்குழித்தல் | — | 80 M |
| 5. | சுகாதாரம் மருத்துவம் தொலைபேசி | — | 80 M |
| 6. | போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் | — | 100 M |
| 7. | குடியிருப்புகளின் உடமை | — | 20 M |
| 8. | வங்கி, காப்புறுதி, மெய்யாதனம் | — | 80 M |
| 9. | மொத்த, சில்லறை வர்த்தகம் | — | 75 M |
| 10. | பொது நிர்வாகம், பாதுகாப்பு | — | 50 M |
| 11. | சேவைகள் | — | 160 M |
| | மொத்த உள்நாட்டு தேசிய உற்பத்தி | | 2460 M |
| | வெளிநாட்டால் கிடைத்த தேறிய வருமானம் | — | + 25 M |
| | (+) or (—) | | ——— |
| | மொத்த தேசிய உற்பத்தி (காரணிவிலை) | — | 2485 M |

மொத்த தேசிய உற்பத்தியானது உற்பத்தி வழியில் கணிப்பிடும்பொழுது காரணி விலைகளிலேயே அமைந்து காணப்படுமாதலால் அதனைச் சந்தை விலைக்கு மாற்றும் போது நேரில் வரியைக் கூட்டி, உதவி மானியத்தை கழிக்க வேண்டும். பெறப்பட்ட தேசிய உற்பத்தியிலிருந்து பெறு மானத் தேய்வினைக் கழிப்பதன் மூலம் தேறிய தேசிய உற் பத்தியினைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ கணிப்பீட்டுச் சிறப்புகளைப் பதிவியல் பகுதியில் மீண்டும் கவனிப்போம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• செழிப்போடு வளருங்கள்
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி
வளமான வாழ்விற்கேற்ற வங்கி

அதி விசேஷ நிலையான வைப்புத்திட்டங்கள். ஒவ்வொன்றும் உங்களின் தனிப்பட்ட தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டவை.

வருடத்திற்கு 20% முதிர்வடைந்ததும்-ஒரு வருடகாலத்திற்கு—
வருடத்திற்கு 18.6% மாதாமாதம் வட்டி — ஒரு வருடகாலத்திற்கு—
வருடத்திற்கு 15% முதிர்வடைந்ததும்—6 மாதத்திற்குப் பின்—
வருடத்திற்கு 14% (ரூபா. 500,000/- க்கு மேற்பட்ட தொகைக்கு)
3 மாதத்திற்குப் பின்—
வருடத்திற்கு 13% (ரூபா. 500,000/- கும் ரூபா 100,000/-க்கும் உட்பட்ட தொகைக்கு)
வருடத்திற்கு 12% (ரூபா. 100,000/- க்கு உட்பட்ட தொகைக்கு)
3 மாதத்திற்குப் பின்—
வருடத்திற்கு 9% (ஆகக்குறைந்த வைப்புப்பணம் ரூபா. 25000/-)
7 நாள் அறிவித்தலின்பின்—

3 மாத கால வைப்புப்பணத்திற்கு வட்டி விகிதம் பேசி ஒழுங்கு செய்யலாம்.
அதி விசேஷ சேவைக்கு நற்பெயர் பெற்றவர்களான
எங்களுடன் வங்கிக் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள்.

வரையறுக்கப்பட்ட இலங்கை
வர்த்தக வங்கி
வளமான வாழ்விற்கேற்ற வங்கி
57, சேர் பாரன் ஜயதிலகா மாவத்தை,
கொழும்பு-1 தொலைபேசி: 28193/5

கிளை நிறுவனங்கள்:
கொள்ளுப்பிட்டி:- 26174
கொட்டாஞ்சேனை:- 23471
கண்டி:- 08—3163 & 08—3217
காலி:- 09—2377 யாழ்ப்பாணம்:- 276
மாத்தளை:- 0662-485
மாத்தறை:- 041—2819
கலேவெல:- 95
வெள்ளவத்தை:-86097

CEYLINCO ADS

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
புகுந்த வீடு

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30 a. m 4-45,
7-15, & 9-45 p. m.
(Action Color)
MISSION IN KABUL

சாந்தி
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
நீயா?
"வெள்ளிவிழா"
வண்ணச்சித்திரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
Gregory Peck
in
THE OMEN
(Scope - Color)
Adults only
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

வசூலில் பெரும் சாதனை! 5-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
கலைஞர் கருணாநிதியின்
கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45,
7-15, 9-30
THE GAUNTLET

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சௌகார்ஜானகி
மகாகவி
காளிதாஸ்

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

# 38 வருட சேவையின் பின் ஓய்வு பெற்றார்

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியின் மத்திய பிரிவில் ஆசிரியராகப் பணிபுரிந்த திரு. வே. சிவசுப்பிரமணியம் 38 வருட ஆசிரிய சேவையின் பின்னர் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

கைதடி கொயிலாங்கண்டியைப்பிறப்பிடமாகக்கொண்ட இவர் சாவகச்சேரி கிறிஸ்தவ ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் ஆசிரிய பயிற்சி பெற்று 1944-ம் ஆண்டு வெளியேறினார். 1947-ம் ஆண்டு தொடக்கம் 1957-ம் ஆண்டு வரை கைதடி சி. எம். எஸ். ஆங்கில பாடசாலையிலு, 1957-ம் ஆண்டு தொடக்கம் இளைப்பாறும்வரை யாழ். பரியோவான் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். சிறந்த சேவையாளரான இவர் கைதடிக் கிராம சபையின் கொயிலாங்கண்டி வட்டாரத்தின் பிரதிநிதியாக இருபது வருடங்களுக்கு மேலாகப் பணியாற்றியதுடன், கைதடி கிராம சபையின் தலைவராகவும் பணியாற்றினார். அப்பகுதியைச் சேர்ந்த சமூக சேவை ஸ்தாபனங்களில் பங்கெடுத்துழைத்த இவர் பயிர்ச் செய்கைக் குழு, சமாதானக் குழு என்பவற்றிலும் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

இவரது சேவையைப் பாராட்டி ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பில் இம்மாதம் 31-ந் திகதி கல்லூரியின் பீற்றோ ஞாபகார்த்த மண்டபத்தில் பிரிவுபசாரம் நடைபெறவிருக்கிறது.

# உத்தரவு

(நெல்லியடி)

கடமை நேரத்தில் சேவலவுடைகள், பட்டிகள் அணியாத பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர்கள் மீது ஒழுக்காற்றுநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக சகல ஊழியர்களுக்கும், கண்டிப்பான உத்தரவொன்று சாலை அத்தியட்சகரால் விடுக்கப்பட்டுள்ளது. (கு)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி — சாவித்திரி
குறவஞ்சி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு
4 காட்சிகள்
கீதாலயா மூவீஸ் அளிக்கும்
மாத்தளை கார்த்திகேசுவின்
டீன்குமார், K.S. பாலச்சந்திரன், பரீனாலை,
விஜயராஜா நடித்த
'அவள் ஒரு ஜீவநதி'
சிறந்த தமிழ் திரைக் காவியம்.

எழில் மிகு யாழ். ஸ்ரீதர் அரங்கில்
வெற்றி முரசு கொட்டும் 4-வது வாரமாக
அலைமோதும் ஜனசமுத்திரத்தில் கொட்டும் மழையிலும்
கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை
எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் M. G. R மற்றும்
லதா, நிர்மலா, V. K. ராமசாமி, P. S. வீரப்பா
நம்பியார், தேங்காய், நாகேஷ், கண்ணன்
மற்றும் பலர் திறம்பட நடித்த ஸ்ரீதரின்
மீனவ நண்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன்

# "இளம்வயதிலேயே சமயப் பற்றை ஊட்டவேண்டும்"

## கல்லூரி சிலை பிரதிஷ்டை விழாவில் நீதிபதி ஞானச்சந்திரன்

(புலோலி)

"மாணவர்களுக்கு இளம் வயதிலிருந்தே சமயப் பற்றும், இறைவழிபாடும் ஊட்டப்படவேண்டும், இதன் மூலமே எதிர்கால வச்சந்ததியினரான மாணவர்கள் பண்படுத்தப்பட்டு, மனம் தூய்மைப்பட்டு மனிதப் பிறவியின் நோக்கத்தையடையமுடியும்'

இவ்வாறு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரக்கல்லூரி இந்து மாணவிகள் வழிபாட்டு மண்டபத்தில் திருக்கேதீஸ்வரத்திலிருந்து கொண்டுவரப்பட்ட வெண்கல நடராஜர் திருவுருவச்சிலை பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்ட வைபவத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட மேலதிக நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் குறிப்பிட்டார். கல்லூரியின் இந்து மாமன்றத் தலைவி ஆசிரியை திருமதி. பு. பஞ்சநதம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

பருத்தித்துறை சிவன்கோவிலிருந்து இவ் வெண்கல நடராஜர் திருவுருவச்சிலை கல்லூரி இந்து மாணவிகள் வழிபாட்டு மண்டபத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. திருவுருவச்சிலை ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டபோது மக்கள் தோரணங்கள், கும்பங்கள் என்பன வைத்து வரவேற்று வழிபட்டனர். பருத்தித்துறை பத்திரகாளி அம்பாள் ஆலயம், கொட்டடி சித்திவிநாயகராலயம், துறைமுகவைரவர் ஆலயம், கோட்டுவாசல் அம்பாள் ஆலயம் ஆகிய ஆலயங்களில் விசேட பூசைகளும், ஆராதனைகளும் நடைபெற்றன.

வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய மேலதிக மாவட்ட நீதிபதி ஞானச்சந்திரன் சொன்னதாவது

இறைவழிபாட்டின் மூலம் எமது மனம் தூய்மைப்படுவதனால் நாம் ஈடேற்றம் பெற முடியும் இறைவழிபாடு எமக்குப் பூரணத்துவமான வாழ்வைத்தரும் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எமது மனம் தூய்மைப்பட்டுப் புக்குவப்படும்போது ஆலயமாகின்றது.

பாடசாலைப் பிள்ளைகளிடம் இறைவழிபாட்டையும், தெய்வ சிந்தனையையும் ஏற்படுத்துவதற்காக அவர்களுக்கு வழிபாட்டிற்கான சகல வசதிகளையும் செய்துகொடுக்க வேண்டியது எமது முதற் கடமையாகும். மாணவர்கள் இறைவழிபாட்டின் மூலம் வாழ்வில் அமைதியையும், உள்ளத்தூய்மையையும் தெய்வீகத்தன்மையையும் பெற்றுக் கொள்வார்கள்'

இந்து மாமன்றத் தலைவி ஆசிரியை திருமதி பு. பஞ்சநதம் தமது தலைமை உரையில் இறைவனே. உலகத்தையும் எம்மையும் இயக்குகிறார்' அவனின்றி அணுவும் அசையாது. நாம் அவனது திருவருளைப் பெறவேண்டும். அப்போது தான் பேரின்பப் பேற்றை நாம் அடைய முடியும்

ஐந்தொழில்களைப் புரியும் எண்குணங்களைக் கொண்ட எமது ஒப்பற்ற தலைவராகிய இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றாராயினும் பசுக்கள் மற்ற ஆன்மாக்களாகிய நாம் அதை அறியாமல் இருக்கின்றோம். நாம் மனதில் இறைவனை நினைத்து வழிபட்டு அவனால் அருளப்படும் திருவருளைப் பெறவேண்டுமென்பதற்காகவே ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் இதனை உணர்ந்து தூய்மையான இறைவழிபாட்டை மேற்கொள்ள வேண்டும்.

செல்வி சாந்தினி மகேந்திரன் உரையாற்றுகையில் சைவ சமயத்தவர்களுக்கு மணிவாசகரின் திருவாசகம் தனிப்பெருஞ்சிறப்புப் பெற்ற நூலாகா விளங்குகின்றது. பௌத்த மதத்தினருக்கு திரிபுடகமும், இஸலாமியருக்கு குர்ஆனும் கிறீஸ்தவர்களுக்கு பைபிளும் எவ்வாறு இருக்கின்றதோ அதேபோல் சைவ சமயத்தவர்களுக்கு திருவாசகம் இருக்கின்றது. திருவாசகம் என்னும் தேனை நாம் ஒவ்வொருவரும் பருகி அதனால் கிடைக்கும் இன்பத்தைப் பெற்று உய்ய வேண்டும் என்றார்.

இவ்வைபவத்தில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு-

(2-ம் பக்கம் பார்க்க)

# இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 11-ம் திகதி
(திங்கட்கிழமை)
(27-10-1980)

மேடம்: எதிர்பாராத நினைவுகளால் பாதிக்கப்படுவீர்கள். சிலர் வாழ்க்கையில் நஷ்டம் ஏற்படும். கடமையில் தடைகள் தோன்றும். மதுபானத்தைத் தவிர்க்கவும்.

இடபம்: வாழ்க்கையில் சிரமங்கள் அதிகரிக்கும். சிலருக்கு உடல் நலனும் பாதிக்கப்படலாம். சுகாதாரத்தைப்பேணி நடக்கவும்.

மிதுனம்: வாழ்க்கை தேனாக இனிக்கும். புதியதுறையின் மூலம் பொருள்களைத் தேடுவீர்கள். உடல்நலனிலும் நல்ல முன்னேற்றம் உண்டு. கல்வியால் பெருமைக்கும் இடமுண்டு.

கடகம்: முற்கோபத்தினால் கலகங்களுக்கு இடமுண்டு. ஆத்திர உணர்ச்சியை அடக்கி நடக்கவும். சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வேதனையைத் தரும்.

சிங்கம்: குடும்பநலனில் அதிகஆர்வம்பிறக்கும். மாதுருவளி ஆதரவும் பெருகும். எக்கருமத்தையும் எண்ணித் துணிக. வாகனத்தால் சுகமும் உண்டு.

கன்னி: பிள்ளைகளின் செல்வாக்குப் பெருகும். இனசனக் கொண்டாட்டத்திற்கும் இடமுண்டு. புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். கொள்கையில் அதிக பற்றுதல் ஏற்படும்.

துலாம்: குடும்பத்தில் குறை கேட்கநேரிடும். சிலருக்கு விரக்தி மனப்பான்மை தோன்றக்கூடும். பொறுமை உணர்ச்சியுடன் நடப்பது நன்று.

விருச்சிகம்: தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு. காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும். தொழில் துறையில் வெற்றியும் உண்டு. செல்வாக்கும் பெருகும்.

தனுசு: அன்னியர் சகவாசம் உங்களை ஆபத்தில் மாட்டி வைக்கும். சிறியவிடயத்திற்கும் கூட அதிக ஆத்திரம் ஏற்படும். அடக்கம் நன்று.

மகரம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிட்டும். இடமாற்றத்திற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்படலாம். பிதாவழிப் பெருமைக்கும் இடமுண்டு.

கும்பம்: உத்தியோக விடயத்தில் உயர்வு காணப்படும். போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் இருக்கும், தூரதேசப் பிரயாணத்திற்கும்இடமுண்டு. இன்று சுபதினமாகும்.

மீனம்: நிதிநிலையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படும். புத்திரர்களால் புகழ் குவியும். பூமியால் முன்னேற்றமும் உண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்துக்கும்
கொழும்புக்குமான
இரு நேரடிசேவை
தினமும் நடைபெறுகிறது.
வாசன்ஸ் சுப்பர் ரவல் சேவையில்
பயணம் செய்யுங்கள்
வர்த்தக விசாரணை:
அசோக் பவான்
112, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 8095

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

பத்தாம் வகுப்பு - தமிழ்மொழி
இரண்டாம் பகுதிக்கான
20
கட்டுரைப் பூந்துணர்
ஆசிரியர்: வித்துவான்
க. சொக்கலிங்கம் M.A. (Cey.)
விலை 8-25
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

### இளம்தாய் மரணம்

(பண்டத்தரிப்பு)

மண்டைதீவைச் சேர்ந்த வசந்தாதேவி (23 வயது) எனும் இருபிள்ளைகளின் தாய் நஞ்சருந்திய நிலையில் யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நேற்று மரணமானார்.

### மின்சார விநியோகம்

(நெல்லியடி)

மண்டான், கல்லுவம் பகுதிக்கு மிகவிரைவில் மின்சாரம் கிடைக்கவுள்ளது. சுமார் 75000 ரூபா செலவில் இணைப்பு வேலைகளை இலங்கை மின்சாரசபை மேற்கொண்டிருந்தது.

## அமெரிக்க...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சபை (House of Representatives); மற்றையது பேராயம் (Senate) எனப்படும் இரண்டாவது சபை. இவ்விரண்டும் சேர்ந்து காங்கிரஸ் (Congress) என அழைக்கப்படும்.

செனட்; இச்சபை அமெரிக்காவின் இரண்டாவது சபை; இதன் உறுப்பினர்கள் மொத்தம் 96 பேர். ஒவ்வொரு உறுப்பு நாட்டினதும் (State) இரு பேராட்கள் இச்சபைக்கு வருகின்றனர். இவர்கள் வக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர் இத்தேர்தல்ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறைநடைபெறும். உறுப்பினர் யாவரும் முப்பது வயதுக்கு மேற்பட்டவராக இருக்கவேண்டும் இப்பேராயம் சாதாரண சட்டங்கள் உண்டாக்குவதில் செனட் பேராட்கள் சபைக்கு ஒத்த அதிகாரத்தைப் பெற்றதாயுள்ளது.

பொருள் நிலைகளைப்பற்றிய மசோதாக்களையும் இச்சபை மாற்றலாம் நுக்கலாம் ஆனால் தானாக உருவாக்கமுடியாது.

ஆட்சித்துறை த்தலைவர் ஜனாதிபதி இச்சபையின்உடன்பாடுபெற்றே அமர்த்தவேண்டும்.

ஜனாதிபதி வெளிநாடுகளுடன் செய்துகொள்ளும்ஒப்பந்தங்கள் செனட்டின் ஒப்புதல் பெற்றால்தான் செல்லுபடியாகும்.

உபஜனாதிபதி தேர்தலிலும் செனட் பங்கெடுத்துக் கொள்கிறது.

### பேராட்கள் சபை

இதற்கு 30,000 மக்களுக்கு ஒரு பிரதிநிதி என்ற விகிதத்தில் உறுப்பினர் தெரிவ கின்றனர். இச்சபை மொத்தம் 435 உறுப்பினர்களைக் கொண்டது. சாதாரண சட்டங்களை உண்டாக்க இச்சபைக்கு அதிகாரமுண்டு. பணம் பற்றிய மசோதாக்களைத் தயாரிக்க இதற்குத்தான் தனி அதிகாரம் உண்டு. செனட்டுக்கு இந்த அதிகாரம் கிடைக்கமாட்டாது. ஜனாதிபதிமேல் குற்றங் கண்டால் அதனைக் கண்டிக்க இச்சபையால்தான் முடியும். அரசியல் அமைப்பில் மாற்றங்கள் உண்டாக்குவதிலும், புதிய நாடுகளை இணைப்பில் சேர்ப்பதிலும் செனட்டுக்குள்ள அதிகாரத்தை இச்சபையும் பெற்றுள்ளது.

# "சமூக விடுதலைக்கு நிரந்தர மனமாற்றமே முக்கியம்"

## சமூக சீர்திருத்த ஆண்டுவிழாவில் உடுப்பிட்டி எம். பி.

(நெல்லியடி)

"மாவட்ட அபிவிருத்திச் சபைக்காக நடைபெறப் போகும் தேர்தல் எதிர்காலத்தில் ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் எவ்வாறு நடாத்தப்படுவார்கள் என்பதற்கொரு அளவுகோலாகவிருக்கும்"

மேற்கண்டவாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம், அல்வாய்-புலோலி ஐக்கிய சமூக சீர்திருத்தக் கழகத்தின் ஆண்டு விழாவில் பேசியபோது தெரிவித்திருந்தார். மாயக்கை குடியேற்றத்திட்ட மைதானத்தில் அமைக்கப்பட்ட அம்பலவன் அரங்கில் திரு. க. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது:

"தமிழ்பேசும் இனத்தின் மத்தியில் சமூககுறைபாடுகள் நிறையவுண்டு. அவைகள் அகற்றப்படவில்லை. அகற்றப் பட்டுவிட்டது என்றால் அது தவறாகும். இதனை தமிழர் விடுதலைக்கூட்டணியும் ஏற்றுக்கொண்டுள்ளது. தமிழ் இனத்தின் சாபக்கேடு தீண்டாமையும் சாதியொடுக்கு முறைகளும்தான் என்று கூட்டணி கருதுகின்றது. இதனால் தான் ஆவரங்கால் மாநாட்டில் தீண்டாமை ஒழிப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"சமூககுறைபாடுகளை நீக்கிக்கொள்ள ஒடுக்கப்பட்ட மக்களே உழைக்கவேண்டும். இவர்களின் ஒற்றுமையே விடிவினை ஏற்படுத்தும். சமூகப் பொருளாதார மாற்றங்களுக்கேற்ப நமது பாதையை வகுத்துக்கொள்ளவேண்டும். தமிழினத்தின் மத்தியில் கூட்டணி மக்கள் இபக்கமாக அமைந்துள்ளது. ஆகவே மக்கள் இயக்கத்துடன் இணைந்து எமது சமூக சமத்துவத்திற்காக போராடமுடியும்.

சமூக விடுதலைக்கு நிரந்தர மனமாற்றமே அத்தியாவசியமாகும். சிலர் சட்டமூலம் சமத்துவத்தினை ஏற்படுத்தலாம் என்று வாதிடலாம். எமது அரசியலமைப்பில் மனிதஉரிமைகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. சமூககுறைபாடுகளுக்கு எதிரான விதிகளும் உண்டு. சட்டம் இருந்து கொண்டேயிருக்கிறது. எத்தனை ஆலயங்களின் கதவுகள் சமத்துவவழிபாட்டிற்காக திறந்துவிடப்பட்டன என்பதனை மக்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

சிறுபான்மைத் தமிழ்மக்களின் பொருளாதார நிலையை நிர்ணயிக்க பல்வேறு இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பனம்பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள், பனம்பொருள் அபிவிருத்திச்சபை என்பன குறிப்பிடற்குரியன. பனம்பொருள் அபிவிருத்திச் சபையினை பொறுத்தமட்டில் அது ஒரு சமூகத்தினை ஒதுக்குகின்ற சூழ்நிலையில் சென்று கொண்டிருக்கின்றது. சீவல் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு பலவகைகளில் அநியாயம் விளைவிக்கப்படும் சபையாக மாறிப்போகின்றது" என்றார்.

## ஆஸ்பத்திரி சென்ற பாலகி காருடன் மோதுண்டு பலி!

(யாழ்ப்பாணம்)

தனது தாயாருடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றுமருந்து எடுத்துக்கொண்டு திரும்பிய பச்சிளம் பாலகி ஒருவர்கார் ஒன்றினால் மோதப்பட்டு மரணமானார்.

நேற்றுமுன்தினம் பீச்ரோட் குருநகரில் இவ்விபத்து நடைபெற்றது. மரணமான ஜெயரத்தினம் ரொசானி (3 வயது) என்பவரின் மரண விசாரணை நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில் நடைபெற்றது.

மரணமானவரின் தாயாரான ஜெயரத்தினம் பிலோமினா அங்கு சாட்சியமளிக்கையில் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த தனது சிறிய மகளுக்கு மருந்து எடுப்பதற்காக தானும் மரணமானவரும் வைத்தியசாலைக்குச் சென்று மருந்து எடுத்துக் கொண்டு திரும்பி வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது எதிரே வந்த கார் ஒன்றில் மோதுண்டு அவர் அவ்விடத்திலேயே மரணமானார் என்று தெரிவித்தார்.

பிரேத பரிசோதனையின் பின் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். மரணவிசாரணை அதிகாரி; கார்ச்சாரதியான விநாசித்தம்பி இராமநாதனை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்து மீண்டும் அடுத்த மாதம் 11ம் திகதி யாழ் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

குருநகர் பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் பெரேரா சாட்சிகளை ஆஜர் செய்தார்.

(கொ-கு)

### பயிற்சி

ரேடியோ-டெலிவிசன், ஏயார்கொண்டிசனிங், மூன்று மாத டிப்ளோமா பயிற்சி- சனி, ஞாயிறு வகுப்புக்கள், சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் 31-10-80வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7190

Hoechst

உலகில் இரசாயனப் பொருட்கள் தயாரிப்பதில் முன்னணியில் திகழ்கின்ற மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த "ஹேக்ஸ்ட்" ஸ்தாபனத்தின் இலங்கைக் கிளை 1980-ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் குடாநாட்டின் எல்லா பகுதிகளிலும்:

"ஹேக்ஸ்ட் விவசாய இரசாயன பொருட்களை"

சந்தைப்படுத்தி விநியோகம் செய்ய உள்ளது என்பதனை வாடிக்கையாளர்களுக்கும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விவசாய சேவை நிலையங்களுக்கும், கமத்தொழில் திணைக்களத்திற்கும், தனியார் வர்த்தக நிலையங்கட்கும், பாவனையாளர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

எங்கள் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகள் முறைக்குமுறை உங்களிடம் வருகை தருவார்கள். மேலதிக விபரங்களுக்கும், இலவச ஆலோசனைகட்கும் தொடர்பு கொள்ளவும்.



ஹேக்ஷ்ட் (சிலோன்) கம்பனி லிமிட்டெட்.,
செயலகம், பண்டகசாலை
315, வக்சால் வீதி. கொழும்பு 2. தொலைபேசி: 23812.

INTASEL

மக்கினென் டிறவல் சேர்விஸ்
(இலங்கை) லிமிட்டெட்.
MACKINNON TRAVEL SERVICE (Ceylon) LTD
தங்களது கிளை ஸ்தாபனத்தை யாழ்ப்பாணத்தில்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
என்ற விலாசத்தில் நிறுவி இயங்கி வருகிறது.
இங்கு ❀ உலகின் எப்பகுதிக்கும் விமான டிக்கட்
❀ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் டிறவலர்ஸ் செக்
சுற்றுலாக்கள் ❀ பாஸ்போர்ட்
இப்படி எல்லா வசதிகளையும் கொழும்புக்குச் செல்லாமலே ஒழுங்கு செய்து கொள்ளலாம்: உங்கள் பிரயாண ஒழுங்குகளை மக்கினென் டிறவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட் ஸ்தாபனத்திடம் ஒப்படையுங்கள்.
மக்கினென் டிறவல் சேர்விஸ் (சிலோன்) லிமிட்,
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92. தொலைபேசி: 8154
பயணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் அக் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QB 8948/78 The Eelanaadu P. B. No. 49
Tgrams Eelanaadu, Phone, 89.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org